செ.வெ.எண்.52 நாள்.22.03.2017.

உலக நீர் தினத்தினை முன்னிட்டு, திருநெல்வேலி நகரம் நயினார்குளம் தூய்மைப்படுத்தும் பணியினை மாவட்ட ஆட்சித் தலைவர்முனைவர் மு.கருணாகரன்,இ.ஆ.ப., அவர்கள் துவக்கி வைத்தார்கள்.

---

உலக நீர் தினத்தினை முன்னிட்டு, திருநெல்வேலி நகரம் நயினார்குளம் தூய்மைப்படுத்தும் பணியினை மாவட்ட ஆட்சித் தலைவர் முனைவர் மு.கருணாகரன்,இ.ஆ.ப., அவர்கள் இன்று (23.03.2017) துவக்கி வைத்தார்கள்.

பின்னர், மாவட்ட ஆட்சித் தலைவர் அவர்கள் செய்தியாளர்களிடம் தெரிவித்ததாவது–

நன்னீர் ஆதாரங்களை பாதுகாக்க வலியுறுத்தி ஆண்டுதோறும் உலகம் முழுவதும் 22.03.2017 அன்று உலக நீர் தினம் கொண்டாடப்படுகிறது. நமது மாவட்டத்தில் வற்றாத ஜீவ நதியான தாமிரபரணி மற்றும் அதன் பாசனக் குளங்கள் திருநெல்வேலி மற்றும் தூத்துக்குடி மாவட்டங்களில் முக்கிய நீர் ஆதாரமாக உள்ளது. இம்மாவட்டங்களை தென் தமிழகத்தின் நெற்களஞ்சியமாக திகழச் செய்து வருகிறது. ஆயிரத்திற்கும் மேற்பட்ட பாசனக் குளங்கள் உள்ளன. குளத்திற்குள் பாலித்தீன் கழிவுகள் அதிகமாக சேர்வதால் நிலத்தடி நீர் மறு உற்பத்தியும் செய்ய முடியாமல் பாதிப்புக்குள்ளாகிறது. இன்றைய தினம், தாமிரபரணி பாசனக் குளங்களை தூய்மைபடுத்தும் முயற்சியில் அகத்தியமலை மக்கள் சார் இயற்கை வள காப்பு மையம், மணிமுத்தாறு நெல்லை இயற்கைச் சங்கம் இணைந்து திருநெல்வேலி டவுண் நயினார்குளத்தை தூய்மைப் படுத்தும் பணியினை தொடங்கி உள்ளார்கள்.

தமிழ்நாடு அரசு பல்வேறு பணிகளை நீரினை பாதுகாத்திட மேற்கொண்டு வருகிறது. திருநெல்வேலி மாவட்டத்தில் 101 குளங்கள் ரூ.6.14 கோடியில் குடிமராமத்துப்பணி திட்டத்தின் கீழ் நடைபெற்று வருகிறது. தாய் திட்டத்தின் கீழ், 48 கண்மாய்கள் ரூ.892 இலட்சத்தில் கரையினை பலப்படுத்துதல், மடைகளை சீர் அமைத்தல், குளங்களை தூர் வாருதல், சீமை கருவேல மரங்களை வேருடன் அகற்றுதல் போன்ற பணிகள் நடைபெற்று வருகிறது.

மேலும், இத்தூய்மை பணிகளை மேற்கொள்ள மாணவ, மாணவியர்களுக்கு தேவையான உபகரணங்கள் வழங்கப்பட்டுள்ளது. குப்பைகளை சேகரிக்க தேவையான கையுறை, பைகள் வழங்கப்பட்டு, குப்பைகளை கொண்டு சேர்க்க வாகன ஏற்பாடும், பொக்லைன் இயந்திரங்களும் வழங்கப்பட்டுள்ளது. சீமை கருவேல மரங்களை வேருடன் அகற்றி நமது மாவட்டத்தின் நிலத்தடி நீர்வள ஆதாரத்தினை பெருக்கிட, நமது மாவட்டத்திலுள்ள அனைவரின் கடமையாகும் என மாவட்ட ஆட்சித் தலைவர் முனைவர் மு.கருணாகரன்,இ.ஆ.ப., அவர்கள் தெரிவித்தார்கள்.

மேலும், நயினார்குளத்தினை தூய்மை படுத்துவதைப்போல திருநெல்வேலி மாவட்டத்திலுள்ள அனைத்து குளங்களையும் தன்னார் தொண்டு நிறுவனங்கள் மூலம் தூய்மைப்படுத்திட முன்வர வேண்டும். பொதுமக்கள் குளத்திற்குள் பிளாஸ்டிக் குப்பைகளை கொட்டுவது அல்லாமல் அதனை சேகரித்து தீ வைத்து எரிப்பதால் அவர்களுக்கு மட்டுமில்லாமல் மற்றவர்களுக்கு மாசு ஏற்பட்டு, தொற்று நோய்கள் ஏற்படுவதுடன், நீர் ஆதாரங்கள் பாதிக்கப்படுகிறது. இதுபோன்ற செயல்படுபவர்கள் மீது, மாநகராட்சி, நகராட்சிகள் அலுவலர்கள் மூலம் கடுமையான நடவடிக்கை மேற்கொள்ளப்படும் என மாவட்ட ஆட்சித் தலைவர் முனைவர் மு.கருணாகரன்,இ.ஆ.ப., அவர்கள் தெரிவித்தார்கள்.

திருநெல்வேலியில் நயினார்குளத்தினை தூய்மை படுத்தும் பணிகளில் ம.தி.தா. இந்து கல்லூரி, சதக்கத்துல்லா அப்பா கல்லூரி, ஏ.கே.ஒய்.பாலிடெக்னிக் கல்லூரிகளை சார்ந்த சுமார் 200 நாட்டு நலப்பத்திட்ட மாணவ, மாணவியர்களும், ஃபிரன்ட்ஸ் ஆப் போலிஸ் சார்ந்த 50க்கும் மேற்பட்ட உறுப்பினர்களும், தன்னார்வ தொண்டு நிறுவனங்களை சார்ந்த உறுப்பினர்களும் ஈடுபட்டுள்ளனர்.

இந்நிகழ்ச்சியில், பொதுப்பணித் துறை செயற்பொறியாளர் திரு.ஆர்.சிவகுமார், வான் பெருநை திட்ட ஒருங்கிணைப்பாளர் மரு.பிரான்சிஸ் ராய், திரு.மு.மதிவாணன், நயினார்குளம் பாசன விவசாயிகள் சங்கத்தின் தலைவர் திரு.நெல்லையப்பன், சங்க உறுப்பினர்கள், ஃபிரன்ட்ஸ் ஆப் போலிஸ் உள்பட அரசு அலுவலர்கள், மாணவ, மாணவியர்கள், தொண்டு நிறுவனங்களைச் சார்ந்தவர்கள் பலர் கலந்து கொண்டனர்.

வெளியிடு : செய்தி மக்கள் தொடர்பு அலுவலகம், திருநெல்வேலி.